## முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

## அசல் வழக்கு எண் .09/2021

வாதி தரப்பு சாட்சி-2 கந்தசாமி திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 10.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது. தற்போது செல்லமாளுக்கு பாத்தியப்பட்டது. நான் 9ம் வகுப்பு படித்துள்ளேன். பொதுவாக ஒரு சொத்து சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்த பின்னிட்டு தான் உரிமை மாற்றம் ஏற்படும் என்றால் சரிதான். சதீஸ் 1ம் பிரதிவாதிக்கு என்ன உறவு என்றால் தம்பி மகன். தாவா சொத்தின் சர்வே எண் விஸ்தீரணம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் சதீஸ் செல்வராஜ் மீது போட்டுள்ளார். எந்த இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் செல்வராஜ் இருக்கும் இடத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு சொத்தின் உரிமை மாற்றம் பெறாமல் அதன் மின் இணைப்பு மற்றும் வீட்டுவரியை மாற்ற முடியாது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கிழக்குபுறம் சதீஸ் நிலமும், மேற்குபுறம் செல்லம்மாள் நிலமும் உள்ளதா என்றால் கிழக்குபுறம் சதீஸ் இடமும், மேற்குபுறம் செல்வராஜ் இடமும் உள்ளது. சதீஸ் தகப்பனாரும் செல்வராஜ்-ன் தகப்பனாரும் சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவருக்கும் ஏற்கனவே அந்த இடத்தில் பட்டா இடம் உள்ளதா என்றால் உள்ளது. செல்லம்மாளின் கணவர் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. செல்லம்மாள் சத்துணவு பணியில் வேலை செய்தாரா என்றால் ஆமாம்.

2) செல்லம்மாளுக்கு குழந்தைகள் உள்ளதா என்றால் இல்லை. தாவா A அட்டவணை சொத்து யாருக்கு சொந்தமா என்றால் தெரியாது. சதீஸ் வீட்டிற்கு முன்புறம் ரோடு உள்ளதா என்றால் உள்ளது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 பட்டா யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அண்ணாமலை மனைவி

செல்லம்மாள் என்பவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5 ல் உள்ள சொத்திற்கு பின்புறம் செல்வராஜ் வீடு உள்ளது என்றால் சரிதான். 2020ம் வருடம் வாதி செல்லம்மாளிடம் பிரச்சனை செய்ததாக நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் பிரதிவாதி புகார் கொடுத்துள்ளாரா என்றால் அது பற்றி தெரியாது. வாதி செல்வராஜ் தான் என்னை அழைத்து வந்தாரா என்றால் ஆமாம். நான் வாதியின் நண்பன் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் முகவரி தகப்பனார் பெயர் எதுவும் இல்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு சொத்திற்கு நான்கெல்லை குறிப்பிட்டு தான் எழுதவேண்டுமென்றால் சரிதான்.

3) செல்லம்மாள் வாதிக்கு நிலம் கொடுக்காமல் சதீஸ்-க்கு நிலம் விற்றதால் முன்கோபம் கொண்டு செல்வராஜ் ஆவணம் தயார் செய்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், அவருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கொடுத்த புகாரில் இருந்து தப்பிக்க வாதி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், அதில் நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு ஆவணம் எழுதவேண்டுமெனில் குறைவான முத்திரை தாளில் எழுதலாம் என்றும், ஆனால் வா.சா.ஆ.4 ஆவணமானது ஒரு வெள்ளைத்தாளில் மோசடியாக ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4 ஆவணம் வாதி மற்றும் என்னால் மோசடியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. எனவே சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Principal District Munsif,**
**Kulithalai.**